602

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024**

**இறுதிப்பரீட்சை**

**மட்டம் - 03**

**EPU3530 – பிள்ளை விருத்தி**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 24.05.2025** **நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. ரூசோ பிள்ளையின் பிறப்பு முதல் கட்டிளமைப்பருவம் வரையிலான விருத்தி நான்கு (04) நிலைகளின் அடிப்படையில் விளக்கியுள்ளார். அந்த **நான்கு (04)** நிலைகளைக் குறிப்பிடுக.

2. கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் "பிள்ளை விருத்தி" பற்றிய தற்போதைய விழிப்புணர்வைப் பயன்படுத்தக்கூடிய **ஐந்து** (05) சூழ்நிலைகளை எழுதுக.

3. சுற்றுச்சூழல் காரணிகள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு, இக் காரணிகள் பிள்ளை விருத்தியை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைச் சுருக்கமாக முன்வைக்குக.

4. 'சூழல் மற்றும் பரம்பரை' என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் மூலம் விளக்குக.

5. "முன்பள்ளிப் பிள்ளைகளிடத்து நுண்ணியக்கத்திறன் விருத்தி மிகவும் முக்கியமானது." மேற்கண்ட கூற்றை ஆதரிக்க **மூன்று** (03) உண்மைகளை முன்வைக்குக.

6. ஆரம்ப பாடசாலை ஆசிரியரென்ற வகையில், முதன்மை நிலை - I மாணவர்களின் மனவெழுச்சி விருத்திக்கு நீங்கள் திட்டமிடும் **ஐந்து** (05) செயற்பாடுளை எழுதுக.

7. பிள்ளையொன்றின் பிறப்புக்கு முந்தைய வளர்ச்சியின் சாதகமற்ற நிலைமைகள் எவ்வாறு பிறப்பிற்கு பிந்தைய நிலையை பாதிக்கின்றன என்பதை **மூன்று** (03) உதாரணங்களுடன் விளக்குக.

8. மாணவர்களின் நேர்மறையான நடத்தைகளை விருத்தி செய்ய முன்பள்ளி ஆசிரியர் என்ற வகையில் பின்பற்றக்கூடிய **ஐந்து** (05) நுட்பங்களைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** "பிள்ளையொன்றின் விருத்தியில் சுற்றுச்சூழல் காரணிகள் பரம்பரை காரணிகளை விட சக்தி வாய்ந்தவை" என்ற கருத்துடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? உங்கள் பதிலுக்கான காரணிகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**ii.** பிள்ளையொன்றில் சமூக விருத்தி ஏற்படும் வகையில் வகுப்பறையில் குழு நடவடிக்கைகளை எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10. **i.** ஜீன் பியாஜே (1954) மற்றும் லெவ் விகோட்ஸ்கி (1978) ஆகியோரால் வழங்கப்பட்ட அறிவாற்றல் விருத்தி அணுகுமுறைகளைச் சுருக்கமாக கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆசிரியரென்ற வகையில் பியாஜே மற்றும் விகோட்ஸ்கி முன்வைத்த கருத்துக்களை முன் பிள்ளைப் பருவத்தில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைக்கு எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதை விமர்சனரீதியாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **i.** மொழி விருத்தியின் நடத்தைவாத நோக்கை (Behaviorist view) விளக்கி, அது குறித்த உங்கள் கருத்துக்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

**ii.** முன்பிள்ளைப்பருவ பிள்ளைகளின் மொழித் திறன்களின் விருத்தியில் சிறப்பியல்புகளைப் பற்றி கலந்துரையாடுக, அப்பிள்ளைகளின் மொழி விருத்தியில் முன்பள்ளி ஆசிரியர் மற்றும் பராமரிப்பாளரின் வகிபங்கை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

12. **i.** முன்பிள்ளைப் பருவ பிள்ளைகளின் சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தியை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கும் காரணிகளைப் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** பிள்ளைகளின் சமூக மற்றும் மனவெழுச்சி தேவைகளைச் சுருக்கமாக விளக்கி, பெரியவர்கள் பிள்ளைகளின் சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தியை எவ்வாறு ஆதரிக்க வேண்டும் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **i.** பிள்ளைகளிடத்து இனங்காணக்கூடிய பிரச்சினைக்குரிய நடத்தைகளை வரையறுத்து, அப்பிரச்சினைக்குரிய நடத்தைகளைப் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**ii.** கல்வி உளவியல் அறிந்த ஆசிரியரென்ற வகையில், அப்பிரச்சினைக்குரிய நடத்தையைக் கட்டுப்படுத்த நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -